பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
26 07 2025 6 45
சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தூத்துக்குடியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- திரைப்படங்களில் டிஜிட்டல் திருட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு வலுப்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.
- தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.
- தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.
- இந்தியா - இங்கிலாந்து இடையேயான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாளான நேற்றைய ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து 7 விக்கெட் இழப்புக்கு 544 ரன் எடுத்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக இன்று தமிழகம் வருகிறார்.

மாலத்தீவில் இருந்து இரவு 7 மணியளவில் தூத்துக்குடி விமான நிலையத்திற்கு வரும் அவர், அங்கு 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி தூத்துக்குடியில் பாதுகாப்பு அதிகரித்துள்ளதுடன், போக்குவரத்து மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளன.

மேம்படுத்தப்பட்ட தூத்துக்குடி விமான நிலையம் தென் மாவட்ட மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்றும், தொழில் வளர்ச்சி அதிகரிக்கும் என்றும் தூத்துக்குடி பகுதி தொழில்துறையினரும், பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

திரைப்படங்களில் டிஜிட்டல் திருட்டைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு வலுப்படுத்தியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இந்தப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு ஒளிப்பதிவு சட்டத்தில் அரசு திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளதாகக் கூறினார்.

இச்சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட பிரிவுகள் அங்கீகரிக்கப்படாத பதிவு மற்றும் ஒளிபரப்பை தடை செய்வதாக அவர் கூறினார்.

டிஜிட்டல் திருட்டை தடுக்கும் வகையில் ஒருங்கிணைந்த உத்திகளை உருவாக்க அமைச்சகங்களுக்கு இடையேயான குழு அமைக்கப்பட்டுள்ளதாக திரு. எல். முருகன் தெரிவித்தார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அரசுப் பணிகளில் காலியிடங்கள் நிரப்பப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்ததாகவும், ஆனால் ஏராளமான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

மின் கட்டண உயர்வால் தொழில்துறை பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களும் இன்னலுக்கு உள்ளாகியிருப்பதாக திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. சுதாகர் ரெட்டி குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் தமிழகத்திற்கான மேலிடப் பொறுப்பாளர் திரு. சுதாகர் ரெட்டி, தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணி வெற்றி பெறும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டுள்ள பிரச்சாரப் பயணத்திற்கு மக்கள் ஆதரவு அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தமிழ் மொழி வளர்ச்சியின் மீதும், தமிழ் பண்பாட்டின் மீதும் பிரதமர் திரு. நரேந்திர மோடி அதிக அக்கறை கொண்டுள்ளதாக திரு. சுதாகர் ரெட்டி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் கடலோர வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இந்த ஆண்டு 6 லட்சம் அலையாத்தி மற்றும் அதனைச் சார்ந்த செடிகள் நடவு செய்யப்பட உள்ளதாக மாநில நிதி, சுற்றுச்சூழல் மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு கூறியுள்ளார்.

சென்னை அடையாறு முகத்துவார பகுதியில் அலையாத்தி மரக் கன்றுகள் நடும் பணியை நேற்று அவர் தொடங்கி வைத்தபின் செய்தியாளர்களிடம் பேசினார்.

நாளை பிரதமர் திரு. நரேந்திர மோடி கங்கைகொண்ட சோழபுரம் வரவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் அருகே டிராக்டர் கவிழ்ந்து ஏற்பட்ட சாலை விபத்தில் 3 பெண்கள் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று முதலமைச்சர் கூறியுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

சிரியாவில் அமெரிக்கப் படைகள் மேற்கொண்ட தாக்குதலில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்பின் முக்கிய தலைவர் **Dhiya Zawba Muslih Al Hardan** கொல்லப்பட்டார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையிலா தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் குறித்து புதுதில்லியில் இன்று நடைபெறும் செய்தியாளர் சந்திப்பில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் விரிவாக விளக்கம் அளிக்க உள்ளார்.

<<<<>>>>

உத்தரப்பிரதேசத்தின் ஆக்ராவில் புதிய திறன் ஆய்வகத்தை மத்திய திறன் மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் செளத்ரி இன்று தொடங்கி வைக்கிறார்.

<<<<>>>>

கரூர் மாவட்டம் மலையனூரில் ஏற்பட்ட சாலை விபத்தில் இருசக்கர வாகனத்தில் பயணித்த 3 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

திருவள்ளூரில் தூய்மைப் பணியாளர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு. நாசர் வழங்கினார்.

<<<<>>>>

நாமக்கல்லில் ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி தலைமையில் விவசாயிகள் குறைதீர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

<<<<>>>>

சென்னையில் திரு.வி.க. நகர் மற்றும் ராயபுரம் மண்டலங்களில் தூய்மைப் பணியாளர்களுக்காகன மின்சார வாகனங்களை மேயர் திருமதி பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாளான நேற்றைய ஆட்டநேர இறுதியில் இங்கிலாந்து 7 விக்கெட் இழப்புக்கு 544 ரன் எடுத்துள்ளது.

மான்செஸ்டரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சில் 358 ரன் எடுத்தது.

இங்கிலாந்து 186 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<>>>>

உலக ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் அனாஹத் சிங் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>